# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 16.05.2023 | supeedsam.com | supeedsam@gmail.com

# அதிரடியாக பதவி நீக்கப்பட்ட ஆளுநர்கள்

## ஜனாதிபதி ரணில் திடீர் முடிவு



வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் அதிபர் ரணில் விக்ரமசிங்கவால் நேற்று (15) பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனை அதிபரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

புதிய ஆளுநர்கள் எதிர்வரும் புதன் கிழமை (17) நியமிக்கப்படவுள்ளனர். ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதிபர் ரணில் விக்ரமசிங்க உத்தேசித்துள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் அண்மையில் தெரிவித்திருந்தன.

அத்தோடு, அதிபரின் பிரித்தானிய விஜயத்தின் பின்னர், ஆளுநர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதால், தன்னைப் பதவி விலகுமாறு, அதிபர் செயலகத்தின் குறித்த உயர் அதிகாரி தனக்கு அறிவித்தார் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்திருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கு ஆளுநராகிறார் செந்தில்

புதன் கிழமை நியமனம்!



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநராக எதிர்வரும் புதன்கிழமை நியமிக்கப்படவுள்ளார் என நம்பகரமான

02 ஆம் பக்கத்தில்...

# மஹிந்த பிரதமராவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாடாளுமன்றத்தை கலைத்து

02 ஆம் பக்கத்தில்...

# அதிகாரப் பகிர்வு பேச்சுவார்த்தை; இணக்கப்பாடு எட்டப்பட்டதா..?

## ஜனாதிபதி - தமிழ் தரப்பு சந்திப்பில் நடந்தது என்ன?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இன்று இடம்பெற்ற அதிகார பகிர்வு பேச்சுவார்த்தை எந்தவிதமான நம்பிக்கை தரக்கூடிய விடயங்களும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் நிறைவடைந்ததாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை நேற்று இடம்பெற்றது. நேற்றைய கூட்டத்தில் அதிகார பரவலாக்கம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி தரப்பில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலான பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

ஆனால், அதிகாரப்பகிர்வு தொடர்பில் தான் ஒரு குழுவை அமைப்பதாகவும், அந்த குழுவில் தமிழ் பிரதிநிதிகளை பங்கேற்குமாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த குழுவின் மூலம் மேலும் கலந்துரையாடல்களை

02 ஆம் பக்கத்தில்...

# நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது!

நினைவேந்தல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால், இன்னோர் இனத்தை வெறுப்பேற்றும் வகையில் நினைவேந்தக் கூடாது.ˀ- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம்

02 ஆம் பக்கத்தில்...

# அதிகாரம் ரணிலிடமா..! மகிந்தவிடமா

## செல்வம் எம்.பி கேள்வி

அதிபர் உத்தர விட்ட பின்னரும் சில செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. உண்மையில் அதிகாரம் அதிபரிடமா அல்லது மகிந்தவிடமா என்ற சந்தேகம் எழுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில்

02 ஆம் பக்கத்தில்...

# மக்களின் ஆணையில் மீண்டும் மஹிந்த பிரதமர் பதவிக்கு வருவார்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது புதல்வருமான நாமல் ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

தலைமைப் பொறுப்பிலிருந்து விடை கொடுத்த போது மக்களுடன் இருந்த மகிந்த, மக்களின் ஆணையின் அடிப்படையில் மட்டுமே மீண்டும் பதவிக்கு வருவார் என நாமல் தெரிவித்துள்ளார்.

மகிந்த பிரதமராக பதவி ஏற்றுக்கொள்வார் இதனால் கலகம் ஏற்படும் என்ற அடிப்படையில் கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது

02 ஆம் பக்கத்தில்...

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero



# காத்தான்குடி மின்சார சபை அலுவலகத்திற்கு முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு ஆரையம்பதி ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் மின்சார வசதியின்றி வசித்து வருகின்ற நிலையில், தமக்கான மின்சாரத்தை வழங்குமாறு வலியுறுத்தி போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

காத்தான்குடி இலங்கை மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக குறித்த குடியேற்ற கிராமமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் இனப்படுகோலை ஊர்திப் பவனிக்கு இராணுவம் இடையூறு





தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஊர்திப் பவனிக்கு இராணுவத்தினரால் இடையூறு ஏற்படுத்தபட்டுள்ளது.

குறித்த ஊர்திப் யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு அண்மையில் பயணித்த போது இடையூறு ஏற்படுத்தபட்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த ஊர்திப் பவனி, முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது.

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நினைவுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர், நினைவுப் பேரணி ஆரம்பமாகியிருந்தது. இந்தப்

பேரணி முல்லைத்தீவிலிருந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களினூடாக மீண்டும் முள்ளிவாய்க்காலைச் சென்றடையவுள்ளது.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை - நினைவூட்டும் வகையிலான ஊர்திப் பவனி இன்று கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்துள்ளது.

குறித்த ஊர்தி சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் பயணித்த போது சிறிலங்கா இராணுவத்தினர் இடையூறு வழங்கியுள்ளனர்.

இராணுவ அதிகாரி ஊர்தி தொடர்பில் கேள்வி எழுப்பி அதிகாரி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டமையினால் சில நேரம் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

# சுகாதார மேம்பாடு தோடர்பான கலந்துரையாடல்



(அபு அலா)

அம்பாறை மாவட்ட - அலிகம்பை பிரதேச மக்கள் எதிர்நோக்கி வருகின்ற மருத்துவ தேவைகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் தலைமையிலான குழுவினர் விஜயமொன்றை மேற்கொண்டு அப்பிரதேச சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடி அப்பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்குவதற்கும், அம்மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும், தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தற்போது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றை கருத்திற்கொண்டும் குறித்த பிரதேசத்திலேயே வைத்திய சேவைகளை வழங்குவதற்குமான நகர்வுகளை முன்னெடுப்பதற்காக தொற்றுநோய்கள் மற்றும் தொற்றநோய்கள் போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதற்கான வைத்திய சேவைகளை குறித்த பிரதேச ஆரம்ப வைத்திய சாலையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை இன்னும் மேம்படுத்தி பல வைத்திய சேவைகளை மக்களுக்கு வழங்கி வைக்கும் நோக்கிலேயே செயலாளர் தலைமையிலான குழுவினர் இந்த விஜயத்தை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# பாராளுமன்ற அமர்வுகளை பார்வையிட்ட யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்கள்



(த.சுபேசன்)

கல்வி அமைச்சினால் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (12/05) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நிகழ்வை பார்வையிடச் சென்ற யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்கள் பாராளுமன்ற அமர்வினையும் பார்வையிட்டிருந்தனர்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் கண்காட்சி நிகழ்வுக்காக யாழில் இருந்து சுமார் %50 பாடசாலை மாணவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரை சந்தித்ததுடன் - பாராளுமன்ற அமர்வினையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லண்டனை தலைமையமாக கோண்டு இயங்கும் அகம் சர்வதேச நிறுவனம்





உலகத்தமிழர்களின் பலவிதமான அபிலாசைகளை வென்றெடுக்கவும் தமிழ் மக்களின் மொழி கலை பண்பாடுகளை பேணிப்பாது காக்கும் நோக்குடன் அகம் எனும் சர்வதேச தொண்டு நிறுவனமொன்று கடந்த 5ம் திகதி லண்டனில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புலத்தில் இயங்கும் எல்லா வகையான தாயகமக்கள்சார் அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களை உள்வாங்கி பெரும்பலத்தோடு உலகப்பரப்பில் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களை உலகமுழுவதும் ஒன்றினைந்து செயற்படும். அத்துடன் உலகப்பரப்பில் வாழ்ந்துவரும் எம் இளையசமுதாயத்தினரையும் அகத்தோடு ஒன்றினைத்து பலம்மிக்க தமிழர் நிறுவனமாக இயங்கும் என அகத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தில் பணிபுரியும் தமிழ் பேண்கள் வீதிக்கிறங்கி போராட்டம்

முல்லைத்தீவு - கொக்காவில் இராணுவ முகாமில் பணிபுரியும் தமிழ் பெண்கள் தற்போது வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்துகின்றனர்.

கொக்காவில் இராணுவ முகாமில் இருந்து வவுனியா இராணுவ முகாமுக்கு செல்லும்படியாக அறிவித்தல் கிடைத்துள்ள நிலையில், அங்கு தம்மால் செல்ல முடியாதெனத் தெரிவித்தே இப்போராட்டம் இடம்பெறுகிறது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள்தமிழ் பிள்ளைகள். மொத்தமாக 104 பேர் இருக்கின்றோம். 2012 இல் இருந்து இந்த முகாமில் தான் நாங்கள் கடமை புரிகிறோம்.

எங்களை வேலைக்கு எடுக்கும்போது கிளிநொச்சியில் தான் வேலை என்று எடுத்தார்கள். ஆரம்பத்தில் எங்களை வேலை கிடைக்கும் போது ஆமி வேலை என்று சொல்லவும் இல்லை. நாங்கள் வந்து விட்டோம் என்பதற்காகவே இவ்வளவு காலமும் வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சேவை காலமும் நெருங்கி விட்டது. ஆனால் இன்று திடீரென்று எங்களை வவுனியா செல்லும்படி சொல்கிறார்கள்.

கஷ்ட நிலைமையில் தான் நாங்கள் இந்த வேலைக்கு வந்தோம். ஆனால் வவுனியாவுக்கு செல்வதற்கு குடும்ப சூழலும் பொருளாதார நிலைமையும் இடம்கொடுக்காது. இது தொடர்பில் பல முறை பேசியும் எந்த விதமான பதில்களும் கிடைக்கவில்லை. எங்களை ஆண்கள் தங்கும் இராணுவ முகாமுக்கே அனுப்புகிறார்கள்.

உங்களால் இந்த முகாமை விட்டு வேறு எந்த இடங்களுக்கும் செல்ல முடியாது என்றனர்.

## அதிகாரப் பகிர்வு பேச்சுவார்த்தை:

மேற்கொண்டு அதிகாரப் பகிர்வு தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

எனினும், தமிழர் தரப்பில் இந்த விடயம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## மக்களின் ஆணையில் மீண்டும் மஹிந்த பிரதமர்....

அர்த்தமற்றது என தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்த நாடு சரியான பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ள தருணத்தில் மீண்டும் போராட்டங்களை நடத்துவது பயனற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதனால் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் என்பதுடன், சுற்றுலாப் பயணத்துறைக்கு தாக்கம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். போராட்டம் நடத்துவதனால் ராஜபக்சர்களும், ரணிலும் விழப் போவதில்லை எனவும் இதனால் ஒட்டுமொத்த நாடே விழும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்றை தீயிட்டு கொளுத்த முயற்சித்தவர்களை கண்டு பிடிக்குமாறு ஜனாதிபதியிடம், நாமல் ராஜபக்ச கோரியுள்ளார்.

## கிழக்கு ஆளுநராகிறார் சேந்தில் புதன் கிழமை நியமனம்!

வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினால் நேற்று (15) பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

இதன்படி புதிய ஆளுநர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை(17) நியமிக்கப்படவுள்ளனர். அந்த வகையிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் பதவி செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்படவுள்ளது.

## அதிரடியாக பதவி நீக்கப்பட்ட ஆளுநர்கள்

ஆனால், தம்மை பதவியில் இருந்து விலகுமாறு அதிபர் தரப்பில் இருந்து எந்த அறிவுறுத்தல்களும் தமக்கு விடுக்கப்படவில்லை என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்திருந்த நிலையில், அதிபர் ரணில் விக்ரமசிங்க 3 மாகாணங்களுக்கான ஆளுநர்களை பதவி நீக்கம் செய்துள்ளார்.

## காத்தான்குடி மின்சார சபை அலுவலகத்திற்கு முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டம்!

ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராம மக்கள் மின்சாரம் பெறுவதற்காக விண்ணப்பித்து ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் உடனடியாக மின்சாரத்தை பெற்றுத்தருமாறு வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை காத்தான்குடி இலங்கை மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளி இடங்களிலிருந்து குடியேறிய மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள ஒல்லிக்குளம் குடியேற்ற கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. கிராமத்தில் மின்சாரமின்மையால் மாணவர்கள் கல்வி கற்கமுடியாமலும் பொதுமக்கள் பாம்புத் தொல்லைகளினால் பெரும் அவலங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனினம் குறித்த கிராமத்திற்கு மின்னிணைப்பை ஏற்படுத்த சுமார் 20 இலட்சம் ரூபாய் வரை தேவைப்படுகின்ற போதிலும், இதற்கான நிதி இலங்கை மின்சாரசபையிடம் இல்லை என காத்தான்குடி பிரதேச மின் அத்தியட்சகர் கனகசபை சிவேந்திரன் தெரிவித்துள்ளார்.

நிதி கிடைத்தவுடன் குறித்த பணியினை நிறைவு செய்யலாம் என அவர் குறிப்பட்டுள்ளார்.

## அதிகாரம் ரணிலிடமா..! மகிந்தவிடமா சேல்வம் எம்.பி கேள்வி

நேற்று இடம்பெற்ற கிறிஸ்ரி குகராஜாவின் நினைவுதினத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாடு முழுவதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாகி உள்ளது. எனவே அதிபர் இதற்கான பதிலை மக்களுக்கு சொல்லவேண்டும்.

முப்படைகளை களமிறக்கி மக்களை அச்சுறுத்துவது தவறான செயற்பாடகவே நான் பார்க்கிறேன்.

அண்மையில் அதிபருடன் எமது சந்திப்பு இடம்பெற்றது. சில விடயங்கள் தொடர்பாக அவர் உத்தரவிட்ட பின்னரும் அதனை மீறும் செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன.

வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடு வன்னியிலும் பரவலடைந்துள்ளது.

எனவே அதிகாரம் அதிபரிடம் இருக்கிறதா அல்லது மகிந்த ராஜபக்சவின் கைகளில் இந்தத் திணைக்களங்கள் இருக்கின்றதா என்ற சந்தேகம் எங்களுக்கும் இருக்கின்றது. மகிந்த தான் அவர்களுக்கு கட்டளை இடுகின்றாரா என்ற கேள்வி எமக்கு இருக்கிறது.

எனவே அதிபர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். மொட்டுக் கட்சியை காப்பாற்றும் செயற்பாட்டை அவர் மேற்கொண்டால் அவர் செய்யும் நற்செயல்களுக்கும் கெட்ட பெயரே ஏற்படும் - என்றார்.

## நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது!

தமிழர் தாயகத்தில் ஆரம்பமாகியுள்ளமை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நினைவேந்தல் உரிமை இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் உண்டு. ஜனநாயக நாட்டில் எந்த இன மக்களினதும் உரிமைகள் பறிக்கப்பட இடமில்லை. அதேபோல் நினைவேந்தல் உரிமையையும் எவரும் தட்டிப் பறிக்க முடியாது.

வடக்கிலுள்ளவர்கள் தெற்கிலுள்ளவர்கள் ஏனைய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் உறவுகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைவேந்தலாம்.

ஆனால், அந்த நிகழ்வுகளை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது ஓர் இனத்துக்கு வெறுப்பேற்றும் வகையிலோ நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தக் கூடாது. - என்றார்.

## மஹிந்த பிரதமராவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது

விரைவில் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை கோருவதாக நாட்டில் பெரும் பரபரப்பு நிலவுகிற நிலையில் அவரை பிரதமராக நியமிப்பதில் தங்களுக்கு எந்த பிரச்சனையும் கிடையாது என கூறியுள்ளார். ஆனால் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்துங்கள் என்றும் அதற்கான அரசாங்கத்தை அமைக்க தாம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் மூலமே மக்களின் ஆணை யாருக்கு உள்ளது என்பதை கண்டறிய முடியும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுளை அனைவரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம்

(பாறுக் ஷிஹான்)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் அம்பாறை மாவட்டத்தில் அனைவரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம் என சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன் குறிப்பிட்டார்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கல்முனையில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்ற போது அங்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்; அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் மே 18 தமிழர் இனவழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் தினத்தினை அனுஸ்டிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.அதனடிப்படையில் எதிர்வரும் மே 16 மற்றும் மே 1% ஆம் திகதிகளில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் இந் நிகழ்வுகளை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.இந்த நிகழ்வுகள் யாவும் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் அனுபவித்த துயரங்கள் படுகொலைகள் அந்த நேரம் உணவுக்காக அவர்கள் பட்ட கஸ்டங்கள் அந்த நேரம் அவர்கள் உணவாக உட்கொண்ட அரிசியையும் நீரையும் கலந்து அவித்து பருகிய கஞ்சி உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் மேற்படி கூறிய தினங்களில் காட்சி படுத்தவும் வழங்கவும் காத்திருக்கின்றோம்.இதன் நோக்கமானது கடந்த யுத்தத்தின் போது எமது மக்கள் அனுபவித்த வேதனைகளைதற்போதைய சந்ததிகள் அறியவும் இச்செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம்.

எனவே அம்பாரை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பொது மக்களும் இணைந்து மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகளில் சிறப்பிக்கவும் உறவுகளுக்காக பிரார்த்தனை செய்யவும் அன்புரிமையோடு அழைப்பதுடன் அனைத்துப் பாதுகாப்பு அனுமதிகளையும் பெற்று ஒழுங்கு செய்துள்ளதால் உறவுகள் அனைவரும் தயக்கமின்றி இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றொம் என்றார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்களான என். தர்சினி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை பிரதேச பிரதான மின்பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு அறிவிப்பு

(எஸ்.சிராஜுதீன் )

கல்முனை பிரதேச பிரதான மின் பொறியியலாளர் பிரிவில் ஒருமாதம் அல்லது அதற்கு மேற்பட்ட மின் நிலுவைகளைக் கொண்ட அனைத்து மின் பாவனையாளர்களும் தமது நிலுவைகளை உடன் செலுத்து மாறும் தவறும்.பட்சத்தில் வீட்டு மின்துண்டிப்பு இடம்பெறுமெனவும் பொறியியலாளர் ஏ.எல்.ஹைகல் தெரிவித்தார். இதேவேளை மீள் இணைப்பு பெறுவதற்கு தஙகளது நிலுவையுடன் மூவாயிரம் ரூபாவும் தாமதக்கொடுப்பனவும் சேர்த்து அறவிடப் படுமெனவும் தெரிவித்தார். நிலுவைகளை அரச அங்கீகாரம்பெற்ற. நம்பகரமான முகவர் ரிலையங்களூடாக செலுத்தமுடியுமெனவும் குறிப்பிட்டார்.

மேலதிக விபரங்களுக்கு 0672229276 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளமுடியுமெனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

# 36 வருட மக்கள் பணியாற்றிய அரசாங்க அதிபர் விமல நாதனுக்கு மகத்தான பிரியாவிடை






( வி.ரி.சகாதேவராஜா)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கதிர்காமத்தம்பி விமலநாதன் ஓய்வு பெறுவதையொட்டி பரவலாக பிரியாவிடை நிகழ்வுகள் முல்லைத்தீவில் இடம் பெற்று வருகின்றது.

36 வருடகால அரச சேவையில் இருந்து இந்த மாதம் 20 ஆம் தேதி ஓய்வுபெறவுள்ள நிலையில் அவரின் சேவையினைப் பாராட்டியும் வாழ்த்தியும் அவருக்கான பிரிவு உபசார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான இவர் மட்டக்களப்பு கல்லடியைச்சேர்ந்தவர். சிறந்த விளையாட்டு வீரரான இவர் சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

இலங்கை நிர்வாக சேவையில் 32 வருடகாலம் சேவையாற்றிய இவர் முந்திய 04 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக ஆறு வருட காலமாக சேவையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் தோறும் பிரியாவிடை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மகத்தான பிரியாவிடை வைபவம் கடந்த வாரம் நடாத்நப்பட்டது.

இந்த நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி தலைமையில் இடம்பெற்றது. தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கோலாட்டம் நிகழ்வுடன் அரசாங்க அதிபர் மற்றும் அவரின் பாரியார் திருமதி மதிலதா இருவரும் வரேவேற்று அழைத்துவரப்பட்டனர்.

மாவட்ட அரசாங்க அதிபரின் சேவை தொடர்பில் பிரதேச செயலாளரால் பாராட்டுக்கருத்துரை வழங்கப்பட்டது. அரசாங்க அதிபரை கௌரவப்படுத்தும் நோக்கில் வாழ்துப்பாவும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கலை நிகழ்வுகளும் ஆற்றுகை செய்து மகிழ்விக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் வாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இறுதியான மாபெரும் பிரியாவிடை வைபவம் நடைபெறுகிறது.

# ஊடகவியலாளர்களுக்கும் இளைஞர்களுக்குமிடையிலான சந்திப்பு



(எப்.முபாரக் )

சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கும் இளைஞர்களுக்குமிடையே தொடர்பாடலை அதிகரிக்கும் அறிவூட்டல் செயலமர்வு ஒன்று அண்மையில் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இளைஞர்களின் ஈடுபாடு மற்றும் அவர்களின் சக்தி ஆகியவற்றின் ஊடாக, சமூகத்தில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தல் என்ற செயற்றிட்டத்தின் கீழ், இந்த செயலமர்வு இடம் பெற்றது. இதனை, ஊஙூகு ஈஙூஙூ என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. ஊஙூகுஈஙூஙூ அமைப்பின் செயற்றிட்ட அதிகாரி விஜயசீலன் சஞ்சீவன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது,

இளைஞர்கள் மத்தியில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்ற. இந்த நிலையில், ஊடகவியலாளர்களுடனான இன்றைய சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென நினைக்கிறேன்.

இளைஞர்கள் எப்போதும், வேகமாக சிந்திப்பவர்கள்.தங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் வேகமாக கிடைக்க வேண்டுமென செயற்படுபவர்கள்.

இந்த நிலையில், ஊடகவியலாளர்களுடனான இன்றைய சந்திப்பின் மூலம் இளைஞர்களுடைய சுயஎண்ணக்கரு, சுய மதிப்பீடு தொடர்பாக அவர்கள் நல்ல மன வலிமை ஒன்றைப் பெற்றிருப்பார்கள். இதன் ஊடாக சமூகத்தின் ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் இலகுவாக கொண்டுவர முடியும் என நினைக்கிறேன்.

சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுத் தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குபவர்கள். ஊடகவியலாளர்களாகும். சமூக மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் தேவையான மிகப் பெரிய ஆயுதம் ஊடகங்கள் ஆகும்.

இந்த செயற்றிட்டம் அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய ஆறு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

செமலமர்வின் வளவாளராக அரசியல்துறை விரிவுரையாளரும் ஊடகவியலாளருமான நிக்சன் கலந்துகொண்டு தெளிவூட்டல்களை வழங்கினார்.

# துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டு வந்தவர் கைது கைது

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரான இளைஞரை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரித்து வைக்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் திருடிச்செல்லப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகள் நிந்தவூர் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தன. இதனை அடுத்து விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸ் குழு



இவ்வாறு காணாமல் போன துவிச்சக்கரவண்டிகளை மீட்டுள்ளதுடன் திருட்டு சந்தேக நபர் மற்றும் திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்தவர்களையும் ஞாயிற்றுக்கிழமை (14) மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நடவடிக்கையின் போது நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம் .நஜீம் தலைமையிலான சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான குணரட்ன ,விசேட புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் , குழுவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது கைதான 24 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் உட்பட திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்ததாக கூறப்படும் சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நிந்தவூர் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டி





(தலவாக்கலை பி.கேதீஸ)

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகள் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைப்பெற்றது.

பிரதம அதிதிகளாக மத்திய மாகாண கல்விச் செயலாளர் ஜி.எச்.எச்.ஏ.பிரேமசிங்க, நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, கல்வி அபிவிருத்தி பணிப்பாளர் கணேஸ்ராஜ், உதவி கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், பாடசாலையின் அதிபர் கிருஸ்ணசாமி ஆகியோர் கலந்துக்கொண்டு வெற்றிப் பெற்ற இல்லங்களுக்கு வெற்றி கிண்ணங்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தனர்.0








வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம்(14.05.2023) காலை 10.00 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப் புப் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து சமஷ்டி அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்தாடல் திருகோணமலை மாநகராட்சி ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

(படங்கள் - அ . அச்சுதன் )

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் களைகட்டிய சர்வதேச தாதியர்தின நிகழ்வு











( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்திசாலையின் சர்வதேச தாதியர் தின நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் தாதியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

. இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஈணூ. இரா. முரளீஸ்வரன், பிரதிப்பணிப்பாளர் டொக்டர் ஜே.. மதன் ,தாதிய கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வீரசிங்கம் , வைத்திய நிபுணர்களான குழந்தை நல மருத்துவ நிபுணர் டொக்டர் வி. பிரேமினி, சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் என். நிரோஷன் பொது வைத்திய நிபுணர் டொக்டர் என்.இதயகுமார், என்பு சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் எஸ்.வருண் பிரசாந்த் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் டொக்டர் எச்.எம்.ரசீன் முஹமட், தாதிய பரிபாலகர் என். சசிதரன் , தாதிய பரிபாலகி திருமதி எல்.சுஜேந்திரன் நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் அவர்களுக்கும் மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது.

மேலும் தாதிய உத்தியோகத்தர் ஏ.என்.டி அல்விஸ் அவர்களினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் தாதிய கல்லூரி முன்னாள் அதிபர் மற்றும் தாதிய பரிபாலகி அவர்களினால் தாதிய தின கேக் வெட்டியும் அனைத்து தாதிய உத்தியோகத்தர்களும் சுடர் ஏந்தி உறுதி மொழியும் எடுக்கப்பட்டது.

மேலும் தாதிய பரிபாலகர் என்.சசிதரன் அவர்களினால் விளக்கக்காட்சியுடனான உரையும் நிகழ்த்தப்பட்டது. மேலும் காதுக்கு இனிமையாக தாதிய உத்தியோகத்தர்களினால் தாதிய தின பாடல் ஒன்றும் பாடப்பட்டது.

மேலும் அங்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தாதிய கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வீரசிங்கம் அவர்களினால் சிறப்புரையும் வழங்கப்பட்டது.

அவரின் உரையில் தாதியத்தின் ஸ்தாபகரான ''புளோரன்ஸ் நைட்டிங் கேர்ள்'' அம்மையாரின் தாதிய கொள்கைகள் பற்றியும் அவரது சிறப்பான அணுகு முறைகள் பற்றியும் குறிப்பிட்டு கூறியதோடு சிறப்பான மற்றும் அர்ப்பணிப்பான சேவைகளை இந்த சமூகத்துக்கு வழங்க வேண்டும் என கூறி அனைத்து தாதிய உத்தியோகத்தர்களுக்கும் வாழ்த்துக்களையும் கூறி தனது உரையை முடித்தார்.

வைத்தியசாலையின் ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர்.இரா. முரளீஸ்வரனின் உரை நிகழ்த்தப்பட்டது.

அவரின் உரையில் உரையில் தாதியத்தின் ஸ்தாபகர் அவர்கள் உலகம் முழுவதும் தாதியப்பயிற்சி பாடசாலைகளை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் சிறப்பான தாதியத்தின் மூலமாக இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் ஆலோசனை வழங்கிய ஒருவராகவும் திகழ்ந்தவர் எனவும் அவரின் அர்ப்பணிப்பான பணிகளை எடுத்து கூறியதோடு தாதியர்கள் தங்களது பணிகளை மனம் வைத்து சிறப்பாகவும் அர்ப்பணிப்புடனும் செய்ய வேண்டும் எனவும் கூறி மேலும் வைத்தியசாலையின் வினைத்திறனான அபிவிருத்திக்கும் தாதியர்களின் சிறந்த சேவை ஒரு காரணியாக அமைந்ததாகவும் அவர்கள் பல சவால்களுக்கு மத்தியில் வைத்தியசாலைக்கு செய்த செயல்களையும் பற்றி பெருமைப்படுத்தினார்.

மேலும் தாதிய உத்தியோகத்தர்களின் மிகசிறந்த ஆளிடைத்தொடர்பும் எமது வைத்தியசாலையை உயர்ந்த இடத்திற்கு இட்டுச்செல்லவும் முடிந்ததாகவும் தாதிய தினத்தில் தனது நல்வாழ்த்துக்களையும் கூறி இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

நன்றியுரையினை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஜி.சோழவேந்தன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

# காரைதீவில் நடமாடும் சேவை

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச செயலகம் நடாத்தும் நடமாடும் சேவை 16.05.2023(செவ்வாய்க்கிழமை) காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை நடைபெறும் என்று பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவிருக்கும் இந் நடமாடும் சேவையில் ஆட்பதிவு திணைக்களம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை காணிகள் பிரிவு இலங்கை மின்சார சபை கல்வி திணைக்களம் பிரதேச சபை உள்ளிட்ட 15 நிறுவனங்கள் சேவையை வழங்க இருக்கின்றன.

# அதிபரை உடனடியாக பதவி நீக்கம் செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம்



ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட காசல்ரீ கார்பெக்ஸ் தமிழ் கல்லூரியின் அதிபரை உடனடியாக பதவி நீக்கம் செய்யுமாறு கோரி அப்பகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்று நேற்று (15) காலை பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய அதிபரின் செயற்பாடுகள் அந்த பதவிக்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் குறித்த அதிபரை நீக்கிவிட்டு வேறு அதிபரை பாடசாலைக்கு நியமிக்குமாறு கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள், லெட்டாண்டி மற்றும் ஒஸ்போர்ன் தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சுமார் 350 பேர் கலந்து கொண்டனர்.

# மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்திட்டத்தின் மேம்படுத்துவதற்கான திட்டத்துக்கு பல ஆயிரம் மக்கள் எதிர்ப்பு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்திட்டத்தின் முதலாம் கட்ட விரிவாக்கமாக கொள்ளளவை மேம்படுத்துவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவதால் இந்த உத்தேச செயற்திட்டத்தால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ்.ரணவிக்க தெரிவித்திருந்த நிலையில் முதலாம் கட்ட விரிவாக்கமாக கொள்ளளவை மேம்படுத்துவதற்கான திட்டத்தக்கு எதிர்ப்பு தெரிவித்து பல ஆயிரம் பொது மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபையில் தெரிவிக்கப்பட்டது.



1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 5% ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல , பெலவத்த , புதிய பாராளுமன்ற வீதி , இல.%54 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையினால் மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்திட்டத்தின் கொள்ளளவை விரிவுபடுத்தப்பட இருப்பதாகவும்

இவ்முதலாம் கட்ட விரிவாக்கல் செயற்திட்டத்திற்கு சமர்பிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு , கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் . மத்திய சுற்றாடல் அதிகார சபை . வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் , மாவட்ட செயலாளர் அலுவலகம் , பிரதேச செயலாளர் அலுவலகம் , மாநகர சபை . பிரதேச செயலகம் . கடற்தொழில் , நீரியல் வளங்கள் திணைக்களம் ஆகியவற்றில் பொதுமக்களின் கருத்துக்களை 2023.02.22 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாக சமர்பிக்கும்படி வேண்டப்பட்டு இருந்தனர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்திலிருந்து ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்திட்டத்தின் கொள்ளளவை விரிவுப்படுத்தப்பட வேண்டாம் என தங்கள் கையெழுத்துடன் கடிதங்கள் மற்றும் கையெழுத்துக்களும் இட்டு மன்னார் பிரஜைகள் குழுவினூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பிரஜைகள் குழுவின் மாதாந்த ஆளுநர் சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்தில் இது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளபோதும் இதற்கான பதில்கள் இன்னும் தங்களுக்கு கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-சனிக்கிழமை (13) மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் மாதாந்த ஆளுநர் சபைக் கூட்டத்திலே இவ்விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோதே இவ்கருத்து தெரிவிக்கப்பட்டது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 15 வது போதுப்பட்டமளிப்பு விழா









**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 15 வது பொது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுவக்கர் (Prof.Aboobacker Rameez ) தலைமையில் வேந்தர் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு இலங்கை ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க( Ranil Wickremesinghe) அவர்களின் பாரியாரும் முதற் பெண்மணியுமான சிரேஷ்ட பேராசிரியை மைத்திரி விக்ரமசிங்க அவர்கள் பிரதம பேச்சாளராக கலந்து கலந்துகொண்டு விசேட உரைநிகழ்த்தினார்.

அதேவேளை மூன்றாவது அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் அவர்கள் பிரதான உரையை நிகழ்த்தினார்.

குறித்த பட்டமளிப்பு விழா நிகழ்வுகளில் முதல் அமர்வில் கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ - வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

கலை கலாசார பீடத்தில் 2015 /2016 ஆம் கல்வி ஆண்டில் அரசியல் மற்றும் சமாதான கற்கையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.எல்.ஏ.காதர் விருதை முகம்மட் அலி பாத்திமா அஸ்மியா பெற்றுக் கொண்டார். இதேவேளை தமிழில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் முகம்மட் ஹுசைன் பாத்திமா றிஸ்லா பெற்றுக்கொண்டதுடன் அதே கல்வியாண்டில் இந்து கலாச்சார கற்கைக்கான சிறந்த மாணவருக்கான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருதை பேபி சாலினி ராமக்கவுண்டர் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ - வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த டிவயாளி கிடாரா மலீசா லக்சாணி வசந்த குமாரி 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் வர்த்தக துறையில் சிறந்த மாணவருக்கான அல் ஹாஜ் ஏ.எம்.இஸ்மாயில் ஞாபகார்த்த விருதை பெற்றுக்கொண்டதுடன் முகம்மட் நஜீம் பாத்திமா நுஸ்ரா முகாமைத்துவ துறையில் அல் ஹாஜ் ஏ.எல். இப்ராலெப்பை ஞாபகார்த்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த அப்துல் மஜீத் முகம்மட் ஆகில் 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் அரபு துறையில் சிறந்த மாணருக்கான எம்.எச்.அப்துல் காதர் ஆலிம் ஞாபகார்த்த விருதையும் முகம்மட் இப்ராகிம் பாத்திமா ஷீபா Islamic Thought Civilization துறையில் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி ஞாபகார்த்த விருதையும் கலந்தார் லெப்பை பாத்திமா மஸ்லிஹா Islamic Banking and Finance துறையில் சிறந்த மாணவருக்கான இஸ்மாயில் டீன் மரிக்கார் விருது வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை கிறிஸ்னபிள்ளை மகாலிங்கம் Master Of arts மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் முஹம்மட் மூஸா Master Of Philosophy பட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெறவுள்ளனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ - வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 3%4 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிருவாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய இடம்பெற்றன.

பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் த. ஜெயசிங்கம் அவர்கள் விஷேட உரையாற்றவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் அன்னையர் தின நிகழ்வுகள்



இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னையர் தின நிகழ்வுகள் பொகவந்தலாவை சீனக்கொலை ஈக டிவிசன் பொது விளையாட்டு மைதானத்தில் நடைப்பெற்றது.

பாரம்பரிய கலை கலாச்சார விளையாட்டு போட்டிகளுடன் மிக கோலாகலமாக இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் பெறுமதிமிக்க பரிசு பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.




## பூங்காக்கள் மற்றும் வடிகான்களை சுத்தப்படுத்தும் பணிகளை மட்டு மாநகர சபை முன்னெடுத்து வருகின்றது






மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பொது மக்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டுவரும் இடங்களை சுத்தப்படுத்தி அழகுபடுத்தும் விசேட செயற்திட்டதிற்கு அமையவும், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு அமையவும் மாநகர ஆணையாளரின் பணிப்புரையின் கீழ் மாநகர சபையின் சுகாதார பிரிவினரால் பிரதி சனிக்கிழமை தோறும் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக (13) மட்டக்களப்பு நகரின் கோட்டைபூங்கா வளாகம், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பூங்கா என்பன சுத்தப்படுத்தப்பட்டதுடன் மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலையினை ஊடறுத்து செல்லும் கோட்டைமுனை பிரதான வடிகானும் இதன்போது தூர்வாரப்பட்டது.

இச்சிரமதானப் பணிகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் திரு.நா. மதிவண்ணன் மற்றும் பிரதி ஆணையாளர் திரு. உ.சிவராஜா ஆகியோருடன் சுகாதார பிரிவின் மேற்பார்வையாளர் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சொல்லத் துடிக்குது மனசு : 13

# சித்திரைப் புதுவருடப் பிறப்பும் தமிழ் பாரம்பரிய விளையாட்டுக்களும்





*சித்திரை மாதமும் வந்தது*
*புத்தாண்டும் நந்நாளில் பிறந்தது*
*புத்தாடை அணிந்து களிப்புடன் புறப்பட்டனர்*
*புத்தாண்டு விளையாட்டுக் காண..*

காலங் காலமாக ஒவ்வொரு இனத்துக்கும் மதத்துக் குமுரிய சமூக, சலாசாரப் பாரம்பரியத்துடன் கலந்த பல தனித்துவமான அம்சங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் பல தனித்துவமான பண்பாட்டு முதுசங்களாக வும் கொள்ளப்படுகின்றன. இத்தகைய சமூக, பண்பாட்டுப் பாரம்பரிய அம்சங்கள் சமூகமயமாக்கத்தின் பிரதான அம்ச ங்களாகவும் கொள்ளப்படுகின்றன. ஒரு சமூகம் தம்மால் காலங் காலமாகப் பேணப்பட்டு வரும் மருபுகள், சம்பிரதா யங்கள், ஒழுக்க, விழுமியங்கள், பழக்க வழக்கங்களை அடுத்த சந்ததியினருக்குக் கையளித்தலையே சமூகமய மாக்கம் எனலாம். இவ்வாறு பரம்பரை பரம்பரையாக கலா சார, பாரம்பரிய அம்சங்களைக் கையளித்துவரும் சமூகமே வாழும் சமூகமாகக் கொள்ளப்படுகின்றன. இன்றைய கால கட்டத்தில் விஞ்ஞான, தொழினுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியும் சமூக ஊடகங்களின் பெருக்கமும் பாரம்பரிய குடும்ப வாழ்க்கையையும் ஒற்றுமையையும் சிதைத்துக் கேள்விக் குறியாக்கிக் கொண்டிருக்கின்றன.

இன்று பெரும்பாலான குடும்பங்களில் கலாசார, பாரம்பரி யக் கையளிப்பு இடம்பெறுவதில்லை. குடும்பத் தலைவன் தலைவிக்கு நேரமில்லை. இருவரும் தொழிலுக்குப் போய் வந்து, சில வீட்டு வேலைகளை முடித்துவிட்டு சிமார்ட் கைப்பேசியைத் தூக்குகின்றார்கள். பலர் நேரம், காலம், தூக்கம், சாப்பாடு, குடும்பப் பொறுப்பு, கணவன், மனைவி, குழந்தைகள், முதியோர் உட்படச் சகலதையும் மறந்து கைப் பேசியில் லயித்திருக்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் சிதைவடந்து கொண்டிருக்கின்றன. படிப்பு, பிரத்தியேக வகுப்பு, கைப்பேசி என்று பிள்ளைகள் ஓய்வில்லாது இருக் கின்றனர். எங்கும் எதிலும் அவசரம். பிள்ளைகளுக்கு ஓய் வுமில்லை, விளையாடுவதற்கு நேரமுமில்லை. அதனால் இளம் சந்ததியினர் பல பாரம்பரிய கலாசார அம்சங்களை இளந்து கொண்டிருக்கின்றனர். சித்திரைப் புதுவருடப் பிறப்போடு சேர்ந்த பல பாரம்பரிய நிகழ்வுகள், விளையாட் டுக்கள் ஆகியன மறந்து கொண்டிருக்கின்றன. நாப்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத் தில் நடைபெற்ற இத்தகைய நிகழ்வுகள், விளையாட்டுக் கள் தொடர்பாகவே இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

தமிழர்களின் புதுவருடப் பிறப்பு என்பது தைப் பொங்கல் தினமா, சித்திரை வருடப் பிறப்பா என்பது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆங்கில புதுவருடப் பிறப்புப்போல் தமிழர்களின் புதுவ ருடமும் தைப்பொங்கல் தினத்தை அடிப்படையாகக் கொண்டே இருந்திருக்க வேண்டும். தமிழ் நாட்டில் ஆரிய, பிராமணிய, சமஸ்கிருதச் செல்வாக்கும் அதனால் ஏற்பட்ட பிறழ்வுகளும் பஞசாங்கத்தில் சித்திரைப் புதுவ ருடப் பிறப்பை மையப்படுத்திக் கணிப்பிட்டு எழுதியிருக் கின்றனர். உலகத்துக்குக் காலக் கணிப்பையும் பருவ மாற்றங்களையும் எடுத்துக் கூறிய தமிழன் நிச்சயம் இந்தத் தவறினைச் செய்திருக்கமாட்டான்.

இந்துக்களும், பௌத்தர்களும் வேளாண்மை அறுவடை முடிந்த களிப்போடு சித்திரைப் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடுவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பார்கள். சித்திரை மாதம் என்பது சூரியன் மேட இராசியில் இருந்து கடக இராசிக்குப் பிரவேசிக்கும் காலத்தில் சூரியன் மத்திய கோட்டில் பிரவேசித்து புவிக்கு அருகாமையில் உச்சம் கொடுக்கும். இக்காலத்தில் பெரும்பாலானோர் வீட்டில் தங்கி இருந்து பிற்பகல் வேளைகளில் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள். அக்காலத்தில் கிராமங்களில் அரச உத்தி யோகம் பார்ப்போர் மிகக் குறைவாகவே காணப்பட்டனர். பாடசாலை விட்டதும் பெரும்பாலான பிள்ளைகள் இளை ஞர்களுடன் சேர்ந்து விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள். அப்போதெல்லாம் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறு வதில்லை. விடுமுறை தினங்களில் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம்தான். அதிலும் சித்திரை மாதம் பிறந்து விட்டால் ஊரெல்லாம் களைகட்ட ஆரம்பித்துவிடும். வீடு, வாசல் திருத்துதல், ஒட்டறை அடித்துச் சுத்தம் செய்து வீடு கழுவுதல், சாணமிட்டு மெழுகுதல், நெல் குற்றுதல், இனிப் புப் பண்டங்கள், முறுக்கு, பலகார வகைகள் செய்தல், புத் தாடை எடுத்தல், தலைமுடி வெட்டுதல், மிளகாய்த் தூள் இடித்தல், கோப்பித் தூள் இடித்தல், பஞ்சாங்கம் பார்த்தல் போன்ற பணிகளில் மும்முரமாக ஈடுபடுவார்கள். எல்லோர் மனதிலும் சந்தோசம் குடி கொண்டிருக்கும்.

சித்திரை வருடப் பிறப்பன்று சகலரும் ஆரவாரத்துடன் செயலில் ஈடுவடுபர். மருத்துநீர் தேய்த்தல், நீராடுதல், புத்தாடை உடுத்தல், மாவிலை, குருத்துக் கட்டல், பொங் கல் கருமங்களில் ஈடுபடல், ஏழு மரக்கறி சமைத்தல், ரசம் வைத்தல், பெரும்பாலான வீடுகளில் எருமைப்பால் சர்க்கரைப் பொங்கல் வைப்பார்கள். பொங்கல் படைத்தல், வழிபடல், பொங்கலைப் பகிர்ந்து எல்லோரும் அமர்ந்தி ருந்து உண்ணல். கோயிலுக்குச் செல்லல் , வழிபடல், ஆசீர்வாதம் பெறல், கைவிசேடம் பெறல், வீட்டுக்குச் செல்லல், சகலருக்கும் கைவிசேடம் வழங்கல் ஆகிய கருமங்கள் சிறப்பாக நடைபெறும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், விருந்தினர்கள் என வீடு களைகட்டிக் கிடக் கும். விருந்தினர்களக்குப் பொங்கல், இனிப்புப் பண்டங் கள் வழங்கிச் சந்தோசப்படுத்துவார்கள். சில இடங்களில் பெரியோருக்கு மதுபானம் வழங்கிக் களித்திருப்பார்கள். பல நாட்கள் வீடுகளில் கொண்டாட்டம் நிகளும். பலரும் உறவினர் வீடுகளுக்குச் சென்று வருவர். அதுத்தடுத்த நாட்களில் கடா வெட்டி, கோழி அடித்து விருந்து வைப்பார் கள். அப்போதெல்லாம் பாய் விரித்து எல்லோரும் நிலத்தில் அமர்ந்திருந்து, ஒற்றுமையாக விருந்துண்பார்கள். வீட்டுத் தலைவி எல்லோருக்கும் பரிமாறுவார். எண்ணெய், இரசா யனப் பதார்த்தங்கள் கலவாத , உடலுக்கு ஆரோக்கியமாகச் சமைத்த உணவு பரிமாறப்படும். இக்காலத்தில் சிலர்கோ யில், குளம் என்றும் செல்வார்கள். இன்னும் சிலர் வண் டில் மாடு கட்டி நகருக்குச் சென்று திரைப்படமும் பார்த்து வருவார்கள்.

சித்திரைக் கொண்டாட்டம் முடிந்து மறு நாளில் இருந்து பாரம்பரிய விளையாட்டுக்கள் களைகட்ட ஆரம்பித்துவிடும். ஊஞ்சலாட்டம், ஆடு புலியாட்டம், கிளித்தட்டு, கிட்டிப் புள்ளு, வார் ஓட்டம், பல்லாங்குழி, தலையணைச் சமர், ஓலை பின்னுதல், தேங்காய் துருவுதல், போர்த் தேங்காய் அடித்தல், மாங்கொட்டை கெத்துதல், பிள்ளையார் கட்டை [கட்டைப் பந்து], மட்டைப் பந்து[பிற்காலத்தில் எல்லே], சி ல்லுக் கட்டை, மாபின் குண்டு விளையாடல், குண்டுமணி விளையாட்டு, மரமுந்திரிக் கொட்டை விளையாட்டு, சுரக் காய் இழுத்தல், கோலாட்டம், தாயம் போடுதல், கல்லுக் கொத்துதல், முட்டி உடைத்தல, சறுக்கு மரம் ஏறல், கயி றிழுத்தல், ஒழித்து விளையாடல், கைகளை மறைத்தல், சமநிலை விளையாட்டு, பம்பரம் சுற்றுதல், கபடி, ஓடிப் பிடித்து விளையாடுதல், மாட்டு வண்டிச் சவாரி, இன்னும் சில இடங்களில் கொம்பு முறி விளையாட்டு ஆகிய பல கிராமிய விளையாட்டுக்கள் விளையாடப்படும். இவ்விளை யாட்டுக்களில் ஊர் ஒற்றுமையையும் விட்டுக் கொடுப்பு, ச கிப்புத் தன்மை ஆகிவற்றையும் காணலாம். இன்றுபோல் அன்று வேறு பொழுது போக்குகள் இல்லாததனால் ஊர் கூடி நின்று விளையாடும்.

சித்திரைப் புதுவருடப் பிறப்பின் பின்னர் விளையாடப் படும் விளையாட்டுக்களில் குழுவிளையாட்டுக்கள், சே ாடி விளையாட்டுக்கள், சம்பிரதாயபூர்வ விளையாட்டுக் ககள், பெண்களுக்கான விளையாட்டுக்கள், சிறுவர் களுக்கான விளையாட்டுக்கள், இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள், சமயம் சார்ந்த விளையாட்டுக்கள், உபகரணங்களுடான விளையாட்டுக்கள் எனப் பலவகை விளையாட்டுக்களை விளையாடுவார்கள். அவை ஆடப் படும் தன்மை, முறை என்பவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும். இக்கிராமிய விளையாட்டுக்கள் பொதுவாக இலகுவாக விளையாடக் கூடியதவை. அழகு ணர்வையும், ஒற்றுமையுணர்வையும் மனமகிழ்ச்சியையும் சிறந்த பொழுது போக்கினையும் வழங்கக்கூடியவை. போட்டித்தன்மை குறைந்தவை. இலகுவாகப் பங்குபற்றி இருவராகவும் குழுக்களாகவும் விளையாடக்கூடியவை, குறைந்த செலவு, குறைந்தளவான உபகரணங்களுடன் விளையாடக்கூடியவை. சமய, சமூக கலாசாரத்துக்கு இசைவாகவும் உடல் ஆரோக்கியத்தையும், உள மகிழ் வையும் தரக்கூடியதுமான கிராமிய விளையாட்டுக்கள் சி றுவர் முதல் பெரியோர் வரைச் சகலராலும் விரும்பி விளை யாடப்பட்டன.

புதுவருட விளையாட்டுக்களில் வார் ஓட்டம், கபடி, கிளித்தட்டு, மட்டைப் பந்து, பிள்ளையார் கட்டை, ஊஞ்ச லாட்டம், தலையணைச் சமர், முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறல், கயிறிழுத்தல், மாட்டு வண்டிச் சவாரி ஆகியன மிகப் பிரபல்யமானவை. விறுவிறுப்பையும், பார்வையாள ரிடத்தில் ஆர்வத்தையும் தூண்டக்கூடியவை. இத்தகைய விளையாட்டுக்களில் பல இன்றும் விளையாடப்படுகின் றன. வார் விளையாட்டில் நன்கு வேகமாக ஓடக்கூடிய சி றுவர்கள், இளைஞர்கள் பங்குபற்றுவர். விளையாட்டுக்குச் சமூகமளித்தோரின் எண்ணிக்கையைப் பொறுத்து இரு அணிகளாகப் பிரிந்து விளையாடுவார்கள். வேகமாக ஓடி எதிரணியை ஆட்டமிளக்கச் செய்பவர்கள் வெற்றி பெற்ற அணியாகக் கொள்ளப்படுவர். அப்போதெல்லாம் கிராமத் துக்குக் கிராமம் விளையாட்டு மைதானங்கள் இன்மையால் ஆலயங்களுக்கு முன்னாலுள்ள வீதி, ஆலமர நிழல்கள், வயல்வெளிகள் ஆகியனவே விளையாட்டு மைதானங் களாகப் பயன்படுத்தப்பட்டன.



**சோலையூர் குருபரன்**

ஆண், பெண் இருவரும் சேர்ந்து சிறுவர் முதல் பெரி யோர் வரை விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று தான் ஊஞ்சலாட்டம். அப்போதெல்லாம் நைலோன் கயிறு கிடையாது. தும்பினால் பல இளைகள் கொண்டு திரிக்கப் பட்ட மூன்று அங்குலச் சுற்றளவுப் பருமனுள்ள தேடாக் கயிறுகள் இரண்டை இணைத்தெடுத்து ஆலமரம், புளிய மரம், வேப்பு மரம், இலுப்பை மரம் ஆகிய ஏதாபதொன்றில் உயர்ந்து நிலத்துக்குச் சமாந்தரமாகச் செல்லவும் உறுதி யான கிளை ஒன்றில் ஊஞ்சல் கட்டுவார்கள். தேடாக் கயிறு பெரும்பாலும் மாட்டு வண்டிகளில் பொருட்களை ஏற்றித் திருக்கு வைத்துக் கட்டுவதற்குப் பயன்படும் கயிறாகும். ஆறு தொடக்கம் எட்டு அடி நீளமான உறுதியாக பலகை அல்லது புறவட்டு ஒன்றனைப் பயன்படுத்துவார்கள். பலகையின் நடுவில் பலர் இருக்க, இருவர் பலகையின் இரு விளிம்பிலும் ஏறி எழுந்து நின்று முழுப் பலத்தையும் பிரயோகித்து உத்துவார்கள். அந்த வேளையில் நடுவில் அமர்ந்திருப்பவர்கள் ஊஞ்சல் பாட்டுப் பாடுவார்கள். விளை யாட வெகுதுயரம் வருகுதடி தோழி, மெதுவாக ஊஞ்ச லைத் தணியுமடி தோழி ஒரு கொடியைக் கிழப்பக் கிழப்ப ஒரு கடகம் பாகக்காய், ஆக்கையும் காணாம் காச்சையும் காணாம் ஐயொ நம்மட பாகக்காய்.. தெத்தாதே ஊஞ்சல் தெத்தாதே, நேரே போ ஊஞ்சில் நேரே போ. தெத்துப் பல காரம் சுட்டுத் தாரேன் என வரும் பாடலடிகளை உடைய முழுப்பாடலையும் இராகத்தோடு பாடுவார்கள்.

மட்டைப் பந்து விளையாடுவதற்குத் தென்னையின் காய்ந்த பெருந்தலை மட்டை ஒன்றை எடுத்து, அதனை மூன்று அடி நீளமாக வெட்டி எடுத்து, அதில் கைப்படி வைத்து அளவோடு சீவி எடுப்பார்கள். அதனைக் கொணடு இறப்பர் பந்தினை அடித்து விளையாடும் விளையாட்டே மட்டைப் பந்தாகும். இவ்விளையாட்டினை இரு அணி களாகப் பிரிந்து விளையாடுவார்கள். ஓர் அணியினரின் ஆட்டமிளப்பும், பெறும் புள்ளிகளையும் கொண்டு வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படும். இதுவும் வேகம், விவேகம் கொண்ட சுறுசுறுப்பான விளையாட்டாக அமைந்திருக்கும். தற்காலத்தில் இதனை எலலே விளையாட்டு என அழைக் கின்றனர். அதேபோல் தற்காலிக மைதானம் அமைத்து இரு அணிகளாகப் பிரிந்து கபடி விளையாடுவார்கள். கோட் டுக்கு உள்ளே வருபவர் கபடிக் கபடிக் கபடி எனக் கூறிக் கொண்டு எதிரணியை ஆட்டமிளக்கச் செய்வார். இவ்வாறு ஆளும் அணியும் மாறி மாறி விளையாடும் போது ஆட்டம் சூடுபிடிக்கும். இறுதியில் ஓர் அணி வெற்றி பெறும்.

இரண்டடி நீளமான கிட்டியும் ஆறு அங்குலம் நீளமான புள்ளும் [தடி] கொண்டு விளையாடப்படுவது கிட்டிய டித்தல்[கிட்டிப் புள்ளு] விளையாட்டாகும். இதிலும் இரு அணிகள்[ஆண்கள்] விளையாடுவார்கள். வெற்றி பெற்ற அணி கிட்டி அடிக்கும். கிட்டி அடித்த தூரத்தை கவடிய டிக்கக் கவடியடிக்கக் கைகால் முறியக் கைகால் முறியக் காலுக்கு மருந்து தேடிக்கட்டு. தேடிக்கட்டு மாம்பட்டை மருதம் பட்டை வெளவாலோடிய தென்னம்பட்டை பூம் பட்டை புளியம்பட்டை பட்டணம் பட்டணம் பட்டணம் ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுக்கியடிக்கப் பாலாநு பாலாறு பாலாறு பாலாறு என்ற பாடல்களைப் பாடிக் கொண்டு தோல் வியடைந்த அணி ஓடி முடிப்பார்கள். இதேபோல் பெண்கள் கிளித்தட்டு, ஆடுபுலியாட்டம், பல்லாங்குழி, ஓலை பின்னு தல், தேங்காய் துருவுதல், குண்டுமணி நடணம், கல்லுக் கொத்துதல், மாங்கொட்டை கெந்துதல், கோலாட்டம் போன்ற பல விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள். சிறுவர், சிறுமிகள் ஓடி, ஒழிந்து விளையாடல், குண்டுமணி, மாபிள் குண்டு விளையாட்டு, மாங்கொட்டை கெந்துதல், பல் லாங்குழி, கல்லுக் கொத்துதல், கிளித்தட்டு, ஓடிப் பிடித்து விளையாடல் ஆகிய பல விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்வார்கள். இவ்வாறு பல நாள் இடம்பெறும் சித்திரைப் புதுவருட விளையாட்டுக்களால் ஊரே மகிழ்ந்திருக்கும்.

புதுவருட விளையாட்டுக்களில் சில இன்று தேசிய விளையாட்டுக்களுள் இடம் பிடித்துள்ளன. தற்காலத்தில் நடைபெறும் புதுவருட விளையாட்டுகளில் ஊஞசலாட் டம், ஆடு புலியாட்டம், கிளித்தட்டு, கிட்டிப் புள்ளு, வார் ஓட்டம், பல்லாங்குழி, போர்த் தேங்காய் அடித்தல், மாங் கொட்டை கெந்துதல், பிள்ளையார் கட்டை[கட்டைப் பந்து], சில்லுக் கட்டை, மாபின் குண்டு விளையாடல், குண்டுமணி விளையாட்டு, மரமுந்திரிக் கொட்டை விளையாட்டு, கோலாட்டம், தாயம் போடுதல், கல்லுக் கொத்துதல், ஒழித்து விளையாடல், கைகளை மறைத்தல், சமநிலை விளையாட்டு, பம்பரம் சுற்றுதல், கபடி, ஓடிப் பிடித்து விளையாடுதல், மாட்டு வண்டிச் சவாரி, கொம்பு முறிப்பு விளையாட்டு ஆகிய பல கிராமிய விளையாட் டுக்கள் அருகி, மறைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளன. வேலைப பளுழுவும், பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புக்களும் சேர்ந்து ஓரிரு நாள் விளையாட்டுன் சித்தி ரைப் புதுவருட விளையாட்டுக்கள் குறுகலடைந்து கொண் டிருக்கின்றன. இந்நிலமை எதிர்காலத்தில் தமிழரின் சமூக, கலாசார, பாரம்பரியங்களின் சிதைவுக்கும் இட்டுச் செல்லலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதைய இளம் சந்ததியினர் விழிப்படைந்து செயற்படுவது சாலப் பொருத்தமானதாக அமையும்.

*மணப் பொருத்தம் மனப் பொருத்தம் பார்த்து*
*மணமக்களைச் சேர்த்த வைக்கும் திருநாளாம்*
*திருமணத்தில் ஊரகூடிச் சேர்ந்திடுவர் சுற்றத்தார்*
*மரபுசார் திருமண வைபவம்*

தொடரும்....



# ஆட்சிக் கவிழ்ப்பும் சமூக நல்லிணக்கமும்!

## சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

'கோட்டாபய ஆட்சி மாற்றத்தினால் 100% இன நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளதை காண முடியாது என்கிறார் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் சபீர் முஹம்மத்.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இன முரண்பாட்டுச் சூழல் காரணமாக ஏற்பட்ட விளைவுகளும், கோட்டாபய ஆட்சி மாற்றத்தின் பின்னர் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் நல்லுறவு எவ்வாறு இருக்கிறது என்பதே ஆராய்வுக்குரியது.

இலங்கை பல்லின மக்கள் செறிந்து வாழும் நாடு. அனைத்து பிரதேசங்களிலும் தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவினங்களையும் சேர்ந்த மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். வர்த்தகம், கல்வி, விளையாட்டு போன்ற அனைத்து துறைகளிலும் இவர்கள் நல்லுணர்வுடன் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள், குண்டு வெடிப்பு சம்பவங்கள் அனைத்து இன மக்களையும் ஒன்றிணையாது தடுத்துள்ளது. இவற்றுக்கு பிரதானமாக அரசியல் நோக்கங்களே காரணம் என்பதை முழுமையாக மக்கள் புரிந்துகொள்ள தொடங்கிய பின்னரே மீண்டும் மக்கள் இன ,மத, மொழி பேதமின்றி ஒன்றிணைந்தனர்.

**இவ்விடயம் குறித்து கருத்து தெரிவித்த ஷபீர்**



'அண்மையில் ஹம்பாந்தோட்டைக்கு சென்றிருந்த போது அங்குள்ள அரசியல் நிலவரம் முற்றாக மாறியுள்ளது . கடந்த காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ அரசை கொண்டு வருவதற்கு மும்முரமாக ஈடுபட்டவர்கள் இப்போது, ராஜபக்சர்களே வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். நாட்டில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புக்களுக்கும்,கலவரங்களுக்கும்,மக்களின் கஷ்ட நிலைமைக்கும் இவர்கள் தான் காரணம் என்பதை பெரும்பான்மை சிங்கள மக்கள் உணர்ந்துள்ளதோடு,சிங்கள மக்கள் செறிந்து வாழும் வீரகெட்டிய, மித்தெனிய, எம்பிலிபிட்டிய பிரதேச மக்களின் மனதிலும் இந்த விடயங்கள் ஆழமாக பதிந்துள்ளதாக கூறினார்.


### இந்த நாட்டில் சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவது ஓயாது!



இலங்கை வரலாற்றில் சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மறக்க முடியாத கறை படிந்த வரலாற்றை கொண்டவையாகும்.வரலாறு திரும்புகிறது என்றாலும் வரலாற்றின் பொற்காலங்கள் ஒரு போதும் திரும்புவதுமில்லை.என்றாலும் மோசமான நிகழ்வுகள் அவ்வப்போது திரும்பத் தான் செய்கின்றன.இலங்கையில் சிறுபான்மையினர் மீது மேற்கொள்ளப்படும் பாகுபாடுகளும்,தாக்குதல்களும் மீள இடம் பெறுவதில்லை என்று திரும்பத் திரும்ப கூறினாலும் அண்மைக்காலமாக சிறுபான்மையினரை குறிவைக்கும் வன்முறைகள் வேறு கதை கூறுகின்றன.சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் அநேகமானோரின் மனதில் இன்னும் காணப்படுகின்ற வடுக்களாக உள்ளது.

'உள்நாட்டுப் போர் முடிவடைந்து 12 வருடங்களை கடந்துள்ள நிலையில் இப்போதும் தொடர்ந்து வெளிப்படையாக நல்லிணக்கத்தை நோக்கி ,சமாதானத்தை நோக்கி ஒரு நாடு என்று காட்டிக் கொண்டாலும், கட்டமைப்புகளை நாம் வளர்த்துக் கொண்டாலும் இன்னும் உள்ளுக்குள் ஒரு பூசல் நிலை இருப்பதற்கு பல சம்பவங்கள் இடம்பெற்று அதனை நிரூபித்துள்ளன. அளுத்கம பிரச்சினை , திகன பிரச்சினை, ஈஸ்டர் தாக்குதல் ,வைத்தியர் ஷாபியின் கைது என்பவற்றை உதாரணங்களாக கூற முடியும்.அதாவது ,சிறுபான்மை இனத்தின் வலி பெரும்பான்மைக்கு விளங்கவில்லை. ஆனால் இன்று பெரும்பான்மைக்கும் அதே நிலை வந்த பின்னரே யோசித்தார்கள். என்கிறார் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் மற்றும் ஆவணப்பட தயாரிப்பாளரான கேஷாயினி எட்மண்ட்.

### அரச சதியே அப்பாவி மக்களின் தலைவிதி!



30 வருடத்துக்கு முன்னர் அகிம்சை போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கும், சிறுபான்மையினர் அரசுக்கு எதிராக திரும்புவதற்கும் அரச சதியே பிரதான காரணமாக அமைந்தது .இந்த நாட்டில் ஜனாதிபதியாக ஆட்சி பீடம் ஏறுகின்றவர்கள் ஓர் இலங்கையராக வர முடியாது,ஒரு பௌத்த சிங்களவரே வரவேண்டும் என எப்போது எழுதப்பட்டதோ அப்போது தான் இந்த நாட்டில் இனவாதம் மலர்ந்தது.பொருளாதாரப் பிரச்சினை, விலைகள் அதிகரிப்பு ஏற்பட்டதும் கடந்த காலங்களில் மக்கள் பாதைக்கு இறங்கினார்கள். இது போன்ற நிலை போராட்ட காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதியில் காணப்பட்டது. எனினும் இந்த போராட்டம் அப்போது கட்டமைக்கப்படவில்லை.

### பொலன்னறுவையில் வசித்து வரும் பௌத்த பிக்கு!



கடந்த ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு இனங்களுக்கிடையில் ஏற்பட்ட நல்லிணக்கம் மாத்திரம் காரணமாக கூற முடியாது .முன்னால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்கும் போது தான் பௌத்த வாக்குகளினால் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டதாக கூறியிருந்தார்.கோட்டாபயவின் ஆட்சி மதங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியிருந்தது.என்கிறார் பொலன்னறுவையை சேர்ந்த நந்தலோக பிக்கு.

### தேரர்களின் முன்னிலையில் கைகட்டி நிற்கும் அரசு!



கடந்த ஆண்டில் ''கோட்டா வீட்டுக்குப் போ'' என்றும், கோட்டா அரசை பதவி விலகக் கோரியும் பரவலான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நாளுக்கு நாள் மிகத் தீவிரமடைந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களில் பெரும்பான்மையினரை தாண்டி சிறுபான்மையினர் பெரிதும் தங்களது ஈடுபாட்டை காட்டவில்லை என்ற விமர்சனம் இருந்தது. பெரும்பான்மையினர் கோட்டாபயவின் ஆட்சி வேண்டும் என்றனர். நாட்டை மீட்க கூடியவர், பாதுகாக்கக் கூடியவர் என்றும் அதனால் 69 லட்சம் சிங்கள மக்கள் திரண்டு வாக்களித்தனர். தான் 69 லட்சம் சிங்கள வாக்குகளால் வென்ற தலைவன் என்றும் , தான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்றும் பெருமையாக கோட்டா கூறி வந்தார். எனினும் அது நிலைக்கவில்லை. 2019 இல் 69 லட்சம் மக்கள் கோட்டாவின் அரசை ஆதரித்து இருந்தாலும் நாட்டின் முழு வாக்காளர்களில் அது 43% மாத்திரமே. அப்போது 120 லட்சம் பேர் தான் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். செல்லுபடியான வாக்குகளில் 52. 25 சதவீதத்தை பெற்றதாலே கோட்டா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாரே தவிர நாட்டின் ஒட்டுமொத்த வாக்காளர்களின் ஆதரவையும் அவர் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை.

நாட்டில் காலாகாலமாக சில பௌத்த மத தலைவர்களின் உந்துதலுடன் இனங்களுக்கு இடையிலான கலவரங்கள் மூட்டப்பட்டு வந்துள்ளது. ஆர்ப்பாட்டங்களின் மூலம் இன, மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு அதிகரித்துள்ளது. அரசியலில் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்தவே அரசியல்வாதிகள் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை ஒரு ஆயுதமாக பயன்படுத்தியதாக கூறுகிறார் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான ரேணுகா மலியகொட.

### இன நல்லிணக்கமே ஒரே தீர்வு!



கலவரங்கள் இந்த நாட்டில் புதியவையல்ல என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்கும், அந்த வரலாற்றின் கதாபாத்திரங்களுக்கும் தெரிந்த ஒரு உண்மை.ஒரு சிகரெட்டுக்காக முழு நகரத்தையும் கொளுத்தி தமது திட்டமிட்ட வன்முறை வெறியை தீர்த்துக் கொண்ட சம்பவங்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கில் வாழ்ந்த தமிழ் , முஸ்லிம் மக்களின் ஆதாரம் இல்லாத அளவுக்கு அவர்கள் கொல்லப்பட்டனர். பௌத்த பிக்குகளின் அடாவடித்தனத்தினால் பேருவளை ,அளுத்கம, தர்காநகர் ஆகிய நகரங்கள் கடந்த 2014 ஆம் ஆண்டு பற்றி எரிந்தன. 2009 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். எனினும் இந்த நாட்டில் இன ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் அவர்களால் நிலைநாட்ட முடியாமல் போனது.

கோட்டாபய அரசு விரட்டியடிக்கப்பட்ட பின்னர் சிறுபான்மையினருக்கு எதிராக செயற்பட்டவர்களில் பலர் தற்போது சிறுபான்மையினரை ஆதரித்து அவர்களுடைய உரிமைகளுக்காக குரல் எழுப்புகின்றதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

### சமூகப் பிரிவினை வாதங்களே அரசியலின் போக்கை தீர்மானிக்கும்!

கோட்டாபய ஆட்சி கவிழ்க்கப்பட பிரதான காரணங்களில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட சமூக நல்லிணக்கம் காரணமாக உள்ளது.

இனங்களுக்கிடையில் வேறுபாடு இருந்தாலும் மனிதன் என்ற வகையில் அடிப்படை தேவைகள் உள்ளன.

அதனை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பக்குவம் வந்த பின்னரே மக்களிடையே சமூக நல்லிணக்கம் ஏற்பட்டது. காலிமுகத்திடல் கோட்டாகம போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் கோட்டா அரசை கவிழ்ப்பதில் உறுதியாக இருந்தார்கள்.

பல்லின சமூகங்களாக ஒன்றுபட்டதனாலே இந்த போராட்டம் முக்கியமடைந்து, இறுதியில் வெற்றியும் கண்டது .இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான அரசியலில் சமூக நல்லிணக்கத்தை தாண்டி சமூகப்



பிரிவினை வாதங்களே அரசியலின் போக்கை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.

ஆனால் கோட்டாபய அரசு கவிழ்க்கப்பட்டதற்கு பிறகு அந்த பிரச்சார முறை பெரிதளவு எடுபடுவதில்லை. என்கிறார் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் மற்றும் சமூக செயற்பாட்டாளரான முஹம்மத் நாஸிக்.

### இளைஞர் படை ஒன்றிணைந்ததே வெற்றி!

கோட்டா ஆட்சிக் கவிழ்ப்புக்கு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக உள்ளது.

கோட்டா ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் பல ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான நிலை, திகன தாக்குதல் மற்றும் வைத்தியர் ஷாபியின் மீதான போலிக் குற்றச்சாட்டு என்பன அரசியல் இலாபங்களுக்காக தோற்றுவிக்கப்பட்டது.இவை அனைத்து இனங்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட்டது.இதிலிருந்து கடந்து வந்த சமூகமாகத்தான் அனைவரும் இருக்கிறோம். அதில் பாடங்களை கற்றுக் கொண்ட நமது சமூகம் அதன் பின்னர் மீண்டும் இவ்வாறு இனரீதியாக நாம் பிரியக்கூடாது என்று கருதி முக்கியமாக இளைஞர் படை கோட்டா அரசை வீட்டுக்கு அனுப்ப பெரும்பாடுபட்டனர்.

குறிப்பாக முஸ்லிம்கள் தங்களுடைய நோன்பு காலங்களிலும், சிங்கள தமிழ் மக்கள் தங்களுடைய புத்தாண்டிலும் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.இதன் மூலம் இனங்களுக்கிடையிலான சகவாழ்வு உலகுக்கு விளங்கியது.

இந்த நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அரசியல் நோக்கங்கள் மாத்திரம் தான் காரணம் என்று கூற முடியாது.அதாவது கடந்த காலங்களில் பௌத்த பிக்கு ஒருவர் பொதுவெளியில் இனவெறியை தூண்டும் வகையில் திட்டமிட்டு செயற்பட்டு வந்தார். ஒரு மதத்தலைவர் என்பவர் அந்த மதத்தவர்களால் சிறந்த அந்தஸ்தை கொண்டு இருப்பார்.எனவே அவர் சரியான பாதையில் இல்லாவிட்டால் ஒட்டுமொத்த சமூகமும் அவரை நடைமுறையில் எடுத்து பிழையான போக்கிலே செல்லும்.அது தான் கடந்த காலங்களில் இடம்பெற்றது.

கோட்டா ஆட்சிக்குப் பின்னர் முற்றுமுழுதான இனநல்லிணக்கம் ஏற்படவில்லை.மாறாக முன்பை விட சமூகம் தற்போது தெளிவடைந்துள்ளதை காண முடிகிறது.

அதாவது ,சமூக வலைத்தளங்களில் முஸ்லிம்களை,தமிழர்களை இலக்கு வைத்து வன்மத்தை வெளிப்படுத்தும் வகையில் பகிரப்படும் பதிவுகளை இப்போதும் காணமுடிகிறது.இன்னும் இனநல்லிணக்கத்தை விரும்பாத , அரசியல் கைக்கூலிகள் ஒரு கூட்டம் இருக்கத் தான் செய்கிறது என்பதை நான் உணர்கிறேன். என்கிறார் அக்குறனையை சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் அப்ரித் வஸீர்.

### ஈஸ்டர் தாக்குதல் ராஜபக்சர்களின் அரசியல் நாடகம்!

கோட்டா ஆட்சி கவிழ்ப்புக்கு சமூக நல்லிணக்கம் காரணம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் கூட இனங்களுக்கு இடையில் வெறுப்புணர்வை உண்டு பன்னித்தான். ஈஸ்டர் குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது முஸ்லிம்களால் இல்லை. அது உண்மையில் நடத்தப்பட்டது குடும்ப அரசியில் சூழ்ச்சிதாரியான மஹிந்த, கோட்டாபய ராஜபக்ஷவினால் என்பது இன்று யாவரும் அறிந்த உண்மையே. ஈஸ்டர் தாக்குதலின் பின்னரே நாங்கள் அறிந்துகொண்டோம் இனங்களுக்கு இடையில் குரோதங்களை வளர்ப்பது இந்த அரசியல் வாதிகளின் தேவைப்பிரகாரமே நடைபெறுகிறது என்பதை.

கால காலமாக நடைபெற்ற பிரச்சினைகளுக்கு அரசியல் பின்னணி தான் காரணம் என்று என்னிடம் கேட்டால் நான் ஆம் என்றே பதில் அளிப்பேன். அரசியல் வாதிகளின் அரசியல் போரையும் பதவியையும் மற்றும் சூழ்சிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்கள் பகடைக்காயாக பயன்படுத்தியது தான் இந்த இனங்களுக்கு இடையிலான பிரச்சினை. சிங்கள- தமிழர்களுக்கு இடையிலான பிரச்சினை, கருப்பு ஜூலை முதல் கட்டவிழ்க்கப்பட்டது. இலங்கை அரசியல் யுத்தப்பிரச்சினையை 2009 ஆண்டு வரை அவர்களை பகடைக்காயக பாவித்தார்கள். 2009க்கு பிற்பட்ட காலம் முஸ்லிம் மக்களுக்கு இடையிலான பிரச்சனைகளை சிங்கள மக்கள் மத்தியில் மூட்டி விட்டு அவர்களிடம் இலாபங்களை அடைந்து கொண்டது இன்று தெளிவாக விளங்குகிறது. இந்த அரசியல் வாதிகளுக்கு அவர்களது பதவியை தக்க வைத்துகொள்ள காலாகாலமாக எதோ ஒரு பிரச்சினையை உண்டு பண்ணி அவர்கள் அவர்களது தேவையை பூர்த்தி செய்து கொண்டனர்.

ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்கள் அதாவது 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் அவர்களது மார்க்கம், அவர்களது இனம் என்ற எண்ணம் கொண்டிருக்கின்றனர். நான் நினைக்கவில்லை அதில் 10 % கூட பரஸ்பர அறிவுள்ளவர்களாக இருப்பார்கள் என்று. இது ஒரு பக்கம் இருக்க இன்றைய புதிய பரம்பையில் 90% அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நன்கு அறிந்து இனங்களுக்கு இடையிலான சகவாழ்வை கருத்தில் கொண்டு அவர்களுடைய செயற்பாடுகளை செய்கின்றனர். முதியோர்கள் இந்தளவு பாடங்கள் படித்தும் இன்னும் இந்த மன நிலையை மாற்ற முடியாமல் இருப்பதை நினைத்து வருந்துகிறேன். பாடசாலைகளில் எல்லா மதங்களையும் மதிப்பதற்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.அது தான் மனிதாபிமானத்தை வளர்த்துக் கொள்ள முடியுமான ஆரம்ப இடம் என்கிறார் கண்டியில் வசிக்கும் கௌஷல்யா விக்ரமசிங்க.

கோட்டாபய ஆட்சி கவிழ்ப்பு, அதன் விளைவுகள் , பின்னர் ஏற்பட்ட நல்லிணக்கம் சம்பந்தமாக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று ஆராய்ந்ததன் அடிப்படையில் ஒவ்வொரு இடங்களில் வாழ்கின்ற மக்களிடையே பல்வேறு நேர்மறையான கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு சிலர் கோட்டா ஆட்சி கவிழ்ப்புக்கு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் காரணம் என்கின்றனர்.மேலும் சிலர் இந்த நல்லிணக்கம் நடுநிலையானது, நிலைக்குமா என்பதில் சந்தேகத்தை கூறுகின்றனர்.நாட்டில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் சிறுபான்மையினரோடு சேர்ந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதை காண முடிந்தது. நாட்டின் ஆட்சியாளர்கள் எவ்வாறு அமைந்தாலும், மக்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டக் கூடியவர்களாகவும், அரசியல் இலாபத்துக்காக தொழிற்படாதவர்களாகவும் உருவாக வேண்டும். அதுவே ஆரோக்கியமான இலங்கையை உருவாக்கும்.

**அப்ரா அன்சார்**

# புத்தர் சிலை நிறுவுதல் விவகாரம் தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றை திரிவு படுத்தும்

## இதை ஒரு காலமும் ஏற்றுக் கொள்ள முடியாது

தமிழர்கள் பௌத்த மதத்திற்கு எதிரானவர்கள் அல்லர் இதேபோல் அனைத்து மதங்களையும், மனித நேயத்தையும், ஜனநாயகத்தையும், மனிதவிழும்மியங்களையும் மனித பண்புகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழர்கள் நாங்கள். இதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆயுதப்போராட்டம், உக்கிரமடைந்த நிலையிலும் கூட, அரச பயங்கரவாதம் இனரீதியான செயற்பாடுகள் தமிழ் இனத்திற்கு எதிராக தூபமிடப்பட்ட நிலையிலும், தமிழ்பாரம்பரிய புனித தலங்களில் குண்டு போட்டு அழிக்கப்பட்ட நிலையிலும் தமிழ் சமூகத்திற்கு மத்தியில் இருந்த ஏனைய இனத்தவர்களின் தொல்லியல் அடையாளங்கள், மதம் சார்புள்ள புனித அடையாளங்கள் ஏன் விகாரைகள் கூட அவ் இனங்கள் இடம் பெயர்ந்த சூழ்நிலையிலும் தமிழர்களாகிய நாங்கள் ஏனையவர்களின் கலாசார அடையாளங்களை பேணி பாதுகாத்து வந்ததே எமது சமூகமாகும். ஏனைய இனங்களின் புனித தலங்களுக்கு தவறாமல் சென்று வழிபடுவதும் இன்றும் கூட சமூகத்தில் குறிப்பிட்டோர் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அரச பயங்கரவாதத்தால் புனித தலங்களுக்கு குண்டு போடுவதும், மாற்று இனத்தவர்களின் புனித தலங்களை, தொல்லியல் அடையாளங்களை வேணுமென்றே இல்லாமல் செய்ததும் பௌத்த தர்மமா? அரசுக்குள் இருந்து கொண்டு புனித தலங்களில் குண்டு வீசுவதும், குண்டு வைப்பதும், புத்தசிலைகளை நிறுவுவதும் இவ்வளவு காலமும் நடைபெற்று வருவது அரசின் கையாளாகாத தனத்தை காட்டுகின்றது மௌனமாக இருப்பது ஒத்துழைப்பதற்கு சமனாகும். இது அரச நீதியான கொள்கையா? மூவின மக்களும் வாழுகின்ற இலங்கை நாட்டில் ஒரு இனம் சார்பாக ஆளுந்தரப்பிலுள்ள சரத்வீரசேகர, முன்னாள் அமைச்சர் சிங்கள பௌத்த நாடு என்று ஏற்றுக் கொள்ளவிடின் ஆபத்தை சந்திக்க நேரிடும், பௌத்த சிங்கள நாடு என ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறுவது சரியா? இது அரச கொள்கைக்கு முரண்பாடு இல்லையா? ஒரு அமைச்சின் கீழுள்ள மதத்தை, அந் நிருவாகத்தை வெளியாளர்கள் நேரடியாக பயன்படுத்துவதென்பது அரச சுற்றுநிருபத்திற்கு முரணானவை. மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இப் பிரச்சினையை பேச்சுவார்த்தைக்கு எடுத்து இருந்தாலும் முடிவு இல்லாமலே முடிவு அடைந்துள்ளது.

இந்நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமாயின் அனைத்து இனங்களின் மதச் சுதந்திரத்தை, கலாசாரத்தை, மனித விழுமியங்களை, புனித அடையாளங்களை பாதுகாக்க வேண்டுமென மு.கிழக்கு மாகாண சபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.






தமிழின அழிப்பு முல்லிவாய்க்கால் கஞ்சானது நேற்று காலை 15.05.2023 மதியம் 12.30 மணியளவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க குடும்பிமலையில் உள்ள அம்மன் கோயில் முன்றலில் வெகு சிறப்பாக மட்டக்களப்பு சிவில் சமூகத்தினரால் வழங்கப்பட்டது.

# மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு படுவான் விருது

கொக்கட்டிச்சோலை மக்கள் நல இளைஞர் மன்றம் நடாத்திய படுவான் விருது வழங்கி நிகழ்வு அண்மையில் கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் படுவான் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கல்விச்சேவையில் நீண்ட காலம் சேவையாற்றி வருகின்ற அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி இவ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கனகசூரியம் யோசம்மா தம்பதியினர் பெற்றெடுத்த நாற் செல்வங்களுள் இரண்டாவது புதல்வியே கனகசூரியம் அகிலா. குருமண்வெளியிலே 1963.10.02 ம் திகதியன்று பிறந்த இவர் இளவயதிலேயே சிறந்த பேச்சாற்றலும், கலைகளிலும் ஆர்வம் கொண்டவராக காணப்பட்டார்.

தமது ஆரம்பக்கல்வியை தம் சொந்த மண்ணின் குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்தில் தரம் 1 - 2 வரை கற்றார். அதன் பின்னர் அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் தரம் 3 - 4 வரை கற்றார்.

பின்னர் தரம் 6 - 11 வரையான தம் கல்விப் பயணத்தை வின்சென்ற் மகளீர் உயர்தரப் பாடசாலையிலும் தமது உயர்தரக் கல்வியை சிவானந்தா தேசியப் பாடசாலையிலும் பயின்றார்.

விஞ்ஞானத்துறையில் கற்ற இவர் தமது உயர் கல்வியை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1982 - 1985 வரை கற்றுத் தேர்ந்து டீளுஉ பட்டத்தையும் பெற்றார்.

ஆசிரியர் பணியே அரும்பணி என்பதனை தம் வாழ்வில் கடைப்பிடித்த இவர் தமது முதலாவது ஆசிரியர் பயணத்தை அலிகார் தேசிய பாடசாலையில் 1988 - 1991 வரை தொடர்ந்தார். இதில் விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களை கற்றுக் கொடுத்தார்.

பின்னர் இந்துக்கல்லூரியில் 1991 - 1998 வரை கணிதம், விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களை கற்பித்துக் கொடுத்தார். அதன் பிறகு கல்வி நிர்வாக சேவையில் தமிழ்மொழி மூலம் திறந்த போட்டிப்பரீட்சை எழுதி அதில் முதலாம் நிலையில் சித்தியடைந்தார்.

ஆசிரியராக கடமையாற்றிய இவருடைய சிறந்த நேர்மையான அர்ப்பணிப்பு மிக்க திறமைக்கான அங்கீகாரமாக உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி கிடைத்தது. மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தில் திட்டமிடல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் 1999 - 2002 கடமையாற்றினார். பின்பு பிரதிக்கல்விப் பணிப்பாளராக 2002 - 2014 வரை திட்டமிடல் மாகாணக் கல்வி திணைக்களத்தில் தமது பணியை தொடர்ந்தார்.

2014 தொடக்கம் 2016 ஆகிய காலப்பகுதிகளில் வலயக்கல்விப்பணிப்பாளராக மூதூர் பிரதேசத்தில் கடமையாற்றியதுடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் 2016 தொடக்கம் 201% வரை கடமையாற்றினார். இவ்வாறாக இவருடைய பணி தொடர்ந்தது. 201% முதல் வலயக்கல்விப் பணிப்பாளர் மட்டக்களப்பு மேற்கில் கடமையாற்றிய இவர் 2023-01-02 முதல் மாகாணக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகிறார்.

# தாய்லாந்து பௌத்த தேரர்களின் பாத யாத்திரை திருமலையில் இருந்து ஆரம்பம்




**(ஹஸ்பர்)**

திருகோணமலையில் இருந்து கண்டி நோக்கிய தாய்லாந்து பௌத்த பிக்குகளின் பாத யாத்திரை (உபசம்பதா) ஆரம்ப நிகழ்வானது நேற்று (15) ஆரம்பமானது. இதில் 50 க்கும் மேற்பட்ட தாய்லாந்து நாட்டை சேர்ந்த பௌத்த பிக்குகள் பங்கேற்றனர்.

திருகோணமலை கண்டி பிரதான வீதி ஊடாக பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மக்கள் விருந்துபசாரம் வழங்கி உற்சாக வரவேற்பளித்தனர். இதன் போது தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாகவும் அவர்கள் வரவேற்பளிக்கப்பட்டனர்.

தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 2%0 வருட பூர்த்தியை முன்னிட்டு இந் நிகழ்வு இடம் பெற்று வருகினறது. திருகோணமலையில் இருந்து பிரதான வீதி ஊடாக கண்டியை நோக்கி இப் பாத யாத்திரை 10 நாட்களுக்குள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய ராமகிருஷ்ண மின் துணைத் தலைவர் சுவாமி கௌதமானந்தா ஜீ இலங்கை வருகை!

**( வி.ரி.சகாதேவராஜா)**

உலகளாவிய ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவரும், சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான அதிவண ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜி மஹராஜ் 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 18 ஆம் தேதி இலங்கை வருகிறார்.

இம்மாதம் 18 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை அவர், மட்டக்களப்பில் பல நிகழ்வுகளில் கலந்து கொள்ள இருப்பதாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார் .


மே 18ஆம் தேதி பிற்பகல் 3 மணியளவில் கல்லடி மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து ஆசிரமம் வரை பொது வரவேற்பு நடைபெற இருக்கிறது .

மே 19 மாலை 5 மணியளவில் கல்லடி ராமகிருஷ்ண மிஷன் ஆசிரம திருக்கோவிலில் சிறப்பு சொற்பொழிவு இடம் பெறும்.

மே 20 ஆம் தேதி கல்லடி விபுலானந்த மணிமண்டபத்தில் சிறப்பு பொது நிகழ்வு காலை 9:30 மணி முதல் 11 30 வரை நடைபெறும்.

மே 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மந்திர தீட்சை இடம் பெற இருக்கிறது .

இதேவேளை, சனிக்கிழமை 20 ஆம் தேதி காலை 9:30 மணி முதல் 12 30 மணி வரை சிறப்பு பொது நிகழ்வு மணிமண்டபத்தில் இடம் பெற இருக்கின்றது.



அங்கு வரவேற்புரையை பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் நிகழ்த்த, தலைமை உரையை இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜி மஹராஜ் நிகழ்த்துவார். இந்தியா காசி ராமகிருஷ்ண மட தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்த ஜீ மகராஜ் வாழ்த்துரை வழங்குவார்.

பின்னர், புத்தக மற்றும் இறுவெட்டு வெளியீடு இடம்பெறும் .

தொடர்ந்து உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் துணைத் தலைவர் சுவாமி கௌதமானந்தா ஜீ மகராஜ் வாழ்த்துரை வழங்குவார்.

ராமகிருஷ்ண மிஷன் பணிகளில் இணைந்து செயல்படும் நிறுவனங்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம் பெறும்.

உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்த ஜீ மகராஜ் நன்றியுரை வழங்குவார்.




முல்லிவாய்க்கால் நினைவு கஞ்சானது இன்று பி.ப 4.30 மணியளவில் கல்லடி உப்போடை சந்தியில் கிழக்கிலங்கை குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மிக சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்வில் கிழக்கிலங்கை குருமார் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.